பக்கங்கள் ஆறு

விலை ரூபா 5.00

27 DEC 2000

# வலம்புரி
VALAMPURI

லாலா சோப்
சன்சயின் சோப்
விநியோகஸ்தர்
பகலோன் ஸ்ரோர்ஸ்
334, ஆஸ்பத்திரி வீதி
யாழ்ப்பாணம்.
லாலாசோப் அச்சுவேலி
(கி.1045)

சங்கு 02 வள்ளுவர் ஆண்டு 2031 மார்கழி 12 புதன்கிழமை (27-12-2000) தொ. பேசி 3378 ஒலி: 08

★ மிருசுவில் பகுதியில் மேலும் பல மனித புதைகுழிகள்

# மனித சடலங்கள் இருக்கலாமென
# மக்கள் மத்தியில் பீதி; அச்சம்! கவலை!

## காணாமல்போனவரின் மனைவி திடுக்கிடும் தகவல்

(மந்திகை, வடமராட்சி நிருபர்கள்)

இராணுவக் கட்டுப்பாட்டு பிரதேசமான மிருசுவில் வடக்குப் பகுதியில் தோண்டப்பட்ட புதைகுழியில் இருந்து எடுக்கப்பட்ட எட்டுச் சடலங்களைவிட மேலும் பல சடலங்களைகொண்ட புதைகுழிகள் அங்கு இருக்கலாமென மக்கள் அச்சம் தெரிவித்துள்ளனர் இராணுவத்தால் கொல்லப்பட்டு புதைகுழியிலிருந்து சடலமாக மீட்கப்பட்ட ஒருவரின் இளம் மனைவியின் வாக்குமூலத்தையடுத்தே இத்கையசந்தேகம்எழுப்பப்பட்டிருப்பதாக தெரிவிக்கப்படுகிறது.

மிருசுவில் பகுதியில் இராணுவத்தினரால் கொலை செய்யப்பட்டு பின்பு புதைகுழியில் இருந்து மீட்கப்பட்ட தெய்வகுலசிங்கத்தின் இளம் மனைவி ஜெயசுதா தெரிவித்த திடுக்கிடும் தகவல் ஒன்றை அடுத்தே அப்பகுதியில் மேலும் பல புதைகுழிகள் இருக்கலாம்என்றும்அவற்றில் சடலங்களும் காணப்படலாம் என்று மக்கள் அச்சம் தெரிவித்துள்ளனர்.

கழுத்து வெட்டப்பட்டு படுகொலை செய்யப்பட்ட தெய்வகுலசிங்கம் இராணுவத்தினரால்படுகொலைசெய்யப்பட முன் தனது மனைவி ஜெயசுதாவிற்கு [வயது-23] கொடுத்த தகவல் ஒன்றின்

(6ம் பக்கம் பார்க்க)

## எட்டுச் சடலங்களும் உறவினரிடம் கையளிப்பு

(மந்திகை வடமராட்சி கிழக்கு நிருபர்கள்)

மிருசுவில் பகுதியில உள்ள புதைகுழி ஒன்றிலிருந்து எடுக்கப்பட்டு பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்டிருந்த எட்டு சடலங்களும் அவர்களது உறவினர்களிடம் நேற்று மாலை 4.00 மணிக்குக் கையளிக்கப்பட்டது.

எட்டுச் சடலங்களும் கழுத்து வெட்டப்பட்டும் கழுத்து நெரிக்கப்பட்டும் கை. கால்கள் கட்டப்பட்ட நிலையிலும் காணப்பட்டது.

உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்ட சடலங்களை எரிக்காது புதைக்குமாறு சாவகச்சேரி மாவட்ட நீதிபதி ஏ. பிறேம்சங்கர் நேற்று உத்தரவிட்டார்

இச்சடலங்களில் ஐந்து சட

(6 ம் பக்கம் பார்க்க)

## மட்டு. திருமலையில் மழை, சூறாவளி 55,000 மக்கள் இடம் பெயர்வு

(திருகோணமலை)

கிழக்கு மாகாணத்தில் கடந்த சில தினங்களாகப் பெய்து வரும் அடைமழையினால் சுமார் 55ஆயிரம் குடும்பங்கள் இடம்பெயர்ந்து பாடசாலைகளிலும், ஆலயங்களிலும் தஞ்சமடைந்துள்ளதாக அறிவிக்கப்படுகிறது.

மட்டக்களப்பு, திருகோணமலை, அம்பாறை ஆகிய மாவட்டங்களில் தொடர்ந்து பெய்து வரும் பெரும் மழையினால் இடம் பெயர்ந்த மக்களுக்குஉடனடியாக சமைத்த உணவு வழங்குமாறு பிரதி சமூக சேவைகள் அமைச்சர் மேவின் சில்வா அதிகாரிகளுக்கு உத்தரவிட்டுள்ளார்.

திருகோணமலை, மட்டக்

(6ம் பக்கம் பார்க்க)

## மிருசுவில் படுகொலைக்கு பலரும் கண்டனம்

(கொழும்பு)

தென்மராட்சி மிருசுவில் பகுதியில் இராணுவத்தினரால் மேற்கொள்ளப்பட்ட மிருகத்தனமான படுகொலைகளைக் கண்டித்து தமிழ்க் கட்சித் தலைவர்கள்அறிக்கைகள் விட்டிருப்பதுடன், பிரதமர் ரட்ணசிறி விக்கிரமநாயக்கா, ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்கா ஆகியோருக்கும் கண்டனங்களைத் தனித்தனியாக அனுப்பிவைத்துள்ளனர்.

மிருசுவில் பகுதியில் இராணுவத்தினரால் மேற்கொள்

(6 ம் பக்கம் பார்க்க)

## வவுனியா, முல்லைத்தீவில்கடும்மழை இயல்பு நிலை பாதிக்கப்பட்டது

(வவுனியா)

திருமலைக்கடலில் மையம் கொண்டிருந்த தாழமுக்கம் முல்லைத் தீவுப்பகுதியை நோக்கி நகர ஆரம்பித்ததை அடுத்து வவுனியாவிலும். முல்லைத்தீவிலும் நேற்றுப் பிற்பகல் 4 மணியளவில் பெருமழையுடன் மினிசூறாவளி வீசியது இதனால் அங்கு இயல்பு வாழ்க்கை ஸ்தம்பிதம் அடைந்துள்ளது.

வவுனியாவில் வீசிய மினி சூறாவளி காரணமாக சிதம்பரபுரத்தில் மீள் குடியேற்றத்திட்டப் பகுதியில் மரம் ஒன்று முறிந்து விழுந்ததில் 14வயது பாடசாலைச் சிறுவன் பரிதாபகரமாக கொல்லப்பட்ட சம்பவம் ஒன்றும் இடம் பெற்றுள்ளது

சிவராசா சுரேஸ் என்ற பள்ளிச் சிறுவனே இவ்வவாறு

(6 ஆம் பக்கம் பார்க்க)

## படுகொலை சம்பவத்திற்கு மாவை சேனாதி கண்டனம்

(கொழும்பு)

ஐந்து வயதுப்பாலகன் உட்பட எட்டுப்பேர் புதைகுழியிலிருந்து சடலங்களாக மீட்கப்பட்டுள்ள கொடூரபடுகொலைச் சம்பவம் எனது இரத்தத்தையே உறைய வைத்துவிட்டது

தமிழர்விடுதலைக்கூட்டணி பாராளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதிராஜா மிருசுவில் படுகொலைச் சம்பவம் தொடர்பாக ஜனாதிபதிக்கு அனுப்பிய பக்ஸ் செய்தியில் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அவர் இச்சம்பவம் தொடர்பாக மேலும் தெரிவித்திருப்பதாவது. மிருசுவில் படுகொலையானது அப்பட்டமான மனித உரிமை மீறல் மட்டுமல்ல, தமிழின அழிப்பு நடவடிக்கையின் இன்னொரு கட்ட நடவடிக்கையாகும்.

இனவெறி கொண்ட படையினர் பாலியல் வல்லுறவு கொலை வெறித்தனம் என்பவற்றில் தீவிரமனநோயாளிகளாகி விட்டனர்.

யாழ்குடா நாட்டில் குவிக்கப்பட்டுள்ள இராணுவத்தி

(6-ம் பக்கம் பார்க்க)

## எண்மரின் அதிர்ச்சி படுகொலை தருகிறது ஈ.பி.டி.பி அறிக்கை

(யாழ்ப்பாணம்)

மிருசுவில் பகுதியில் வீடுகளைப் பார்வையிடச் சென்ற எட்டுப்பேர் அப்பகுதியில் நிலை கொண்டுள்ள இராணுவச் சிப்பாய்களினால் படுகொலை செய்யப்பட்டமை எமக்கு அதிர்ச்சியையும் கவலையையும் அளித்துள்ளது. இச்சம்பவம் தொடர்பாக பூரண விசாரணை நடத்தி நீதி நிலைநாட்டப்பட வேண்டும் என்று ஈ பி.டி.பி

(6ம் பக்கம் பார்க்க)

## யாழ் நகரில் சுவரொட்டி

(யாழ்ப்பாணம்)

யாழ் நகரப்பகுதியில் விடுதலைப்புலிகளின் மாணவரமைப்பு புலி இலட்சனை பொறிக்கப்பட்ட பிரசுரம் ஒன்றை வெளியிட்டுள்ளது.

அப் பிரசுரத்தில் ''சரணடைவதற்கு தமிழீழ விடுதலைப்புலிகள் ஸ்ரீலங்கா படை போல் ஒருகூலிப்படையல்ல'' என்று தமிழிலும் ஆங்கிலத்திலும் வாசகங்கள் காணப்பட்டன.

மேற்படி பிரசுரங்கள் சில நகர்ப்பகுதிகளில் ஒட்டப்பட்டிருந்தது. (ந-12-59)

## ரூபா.2இலட்சம் வழங்க அமைச்சர் டக்ளஸ் உத்தரவு

(யாழ்ப்பாணம்)

மிருசுவில் பகுதியில் கடந்த 19 ந்திகதி வீடு பார்க்கச் சென்றவேளை இராணுவத்தினரால் கொலை செய்யப்பட்ட, எட்டுப்பேரது குடும்பத்துக்கும் தலா இரண்டு இலட்சம் ரூபா நஷ்டஈடு வழங்குமாறு வடபகுதி புனர்

(8ம் பக்கம் பார்க்க)

## கப்பல் சேவையை நடத்த ஆர்ப்பாட்டப் பேரணி

(திருமலை)

திருமலைக்கும் யாழ்ப்பாணத்துக்கும் இடையிலான பயணிகள் கப்பல் சேவையை உடனடியாக நடத்துமாறு கோரி கப்பல்பயணத்திற்காக காத்திருக்கும் பயணிகள் நேற்று ஆர்ப்பாட்ட ஊர்வலம் ஒன்றை திருமலையில் நடத்தியிருந்தனர்.

திருகோணமலை பிரதேச செயலகத்திற்கு முன்னால் கொட்டும் மழையின் மத்தியிலும் ஆர்ப்பாட்டம் இடம பெற்றது.

ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டோர் திருகோணமலை பிரதேச செயலர், வடக்குக் கிழக்கு மாகாண ஆளுநர், பிரதம செயலாளர், சர்வதேச செஞ்சிலுவைக் குழுவினர் ஆகியோருக்கு மகஜர்கள் சமர்ப்பித்துள்ளனர். (வ)

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

## சிறு விளம்பரம்

### வாங்க விற்க

உதிரிப் பாகங்களிக்காக ரி.வி. றேடியோ, டெக்குகள் வாங்கப்படும். ரி.வி. டெக், றேடியோ, மணிக் கூடுகள் திருத்தித்தரப்படும் அன்ரனா பொருத்தித்தரப்படும். வீனஸ் டெல்கா 140, கே.கே.எஸ். வீதி (சத்திரச்சந்தி முன்பாக) யாழ்ப்பாணம், T. P. 2064

(1991)

### வகுப்புக்கள்

தமிழ் தட்டெழுத்து, சுருக்கெழுத்து ஆங்கில தட்டெழுத்து வகுப்புக்கள் புதிய பிரிவு ஆரம்பம் 28/12/2000 தொடர்பு

5. அம்மன் வீதி,
(வைரவர் கோயில் முன்பாக)
கந்தர்மடம்,
யாழ்ப்பாணம்.

(2038)

## பாராட்டி வாழ்த்துகின்றோம்

கூட்டுறவுக் கொள்கைக்கு ஓர் முன்னுதாரணமாகத் திகழ்ந்த 25 ஆண்டைப் பூர்த்தி செய்த பனை, தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்களின் வெள்ளி விழா மலர் வெளியீடு செய்வதைப் பாராட்டி வாழ்த்துகின்றோம்.

பணிப்பாளர்கள் பணியாளர்கள்

வலிகாமம் பனை தென்னை வள
அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்களின்

சங்கானைவீதி கொத்தணி
மானிப்பாய்

(கி-1142)


## அறிவித்தல்

### நல்லூர் சங்கிலியன் மன்றம்

25/12/2000 திகதியில் உதயன் பத்திரிகையில் நல்லூர் சங்கிலியன் மன்றத்தின் புதிய நிர்வாகசபை அங்கத்தவர்களின் பெயர் பிரசுரிக்கப்பட்டுள்ளது. கடந்த செயலாளரால் நிர்வாக சபை இயங்காது, நிதி நிலை பரிசீலிக்கப்படாது தலைவர் ஆகிய எனக்கு அறிவிக்காது, அங்கத்தவர்களுக்கு அறிவித்தல் கொடுக்காது. சனிக்கிழமை வீடுகளுக்கு சென்று ஒரு சிலரைக் கூட்டி புதிய நிர்வாகசபையை தெரிவு செய்துள்ளார்கள். இந்தத் தெரிவு யாப்பு விதிகளுக்கு ஏற்றது அல்ல என்றும் இவ்விடயமாக சனசமூக நிலைய அதிகாரிகளின் கவனத்திற்கு கொண்டு வந்துள்ளேன். எனது அனுமதியில்லாது ஒரு சிலரினால் நடத்தப்பட்ட இந்தக் கூட்டம் செல்லுபடி அற்றது என்பதை பொதுமக்களின் கவனத்திற்கு கொண்டு வருகிறேன்.

தி. ஸ்ரீஸ்கந்தராசா
தலைவர்

இல : 10 இராச வீதி,
நல்லூர் சந்தை.

(2043)


## வாழ்த்துகின்றோம்

இன்று யாழ். மத்திய கல்லூரியில் நடைபெறும் பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்களின் வெள்ளிவிழா மலர் வெளியீடு சிறப்புற அமைய மனமார வாழ்த்துகிறோம்.

சுன்னாகம்,
பனை தென்னை வள
அபிவிருத்திக் கூட்டுறவு
சங்கம்

தலைவர்
பொதுமுகாமையாளர்
பணிப்பாளர்கள்
அங்கத்தவர்கள்
பணியாளர்கள்

(2048)

கால் நூற்றாண்டு, கால வரலாறு கண்ட
பனை தென்னை வள அபிவிருத்திக்
கூட்டுறவுச் சங்கங்களின்

## வெள்ளி விழா மலர் வெளியீடு

2000 - 12 - 27

யாழ். மத்திய கல்லூரி மண்டபம்

வடமாகாண தெங்கு பனம்பொருள் கூ.ச. சமாசத்தின் தலைவர்: திரு. கி. பூபாலசிங்கம் அவர்கள் தலைமையில் நடைபெறவுள்ளஇவ் விழாவில் யாழ். மாவட்ட மேலதிக அரச அதிபர் திரு. து. வைத்திலிங்கம் அவர்கள் முதன்மை விருந்தினராகக்கலந்துகொள்வார்கள்.

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

மலர்க் குழு
பனை தென்னை வள அபிவிருத்திக்
கூட்டுறவுச் சங்கங்களின்
வெள்ளி விழா அமைப்பு

(கி-1143)


# பயண அனுமதி வழங்கப்பட்டோர்விபரம்

இம் மாதம் 23 ஆம் திகதி வெளியிடப்பட்ட பட்டியலின் படி வெளிமாவட்டங்களுக்குப் பயணம் செய்ய அனுமதி வழங்கப்பட்டவர்களது இலக்கங்கள் பிரதேச செயலர் ரீதியாகத் தரப்படுகின்றன.

(நேற்றைய தொடர்ச்சி)

| | |
|---|---|
| 175214 பி | 175214 சி |
| 175214 டி | 175235 ஏ |
| 175235 பி | 175261 ஏ |
| 175279 ஏ | 175297 ஏ |
| 175297 பி | 175310 ஏ |
| 175310 பி | 175367 ஏ |
| 175372 ஏ | 175372 பி |
| 175385 ஏ | 175400 ஏ |
| 175402 ஏ | 175409 ஏ |

### வேலணை

| | |
|---|---|
| 13719 ஏ | 13719 பி |
| 13719 சி | 14002 ஏ |
| 14002 பி | 14005 ஏ |
| 14005 பி | 14005 சி |
| 14005 டி | 14005 ஈ |
| 14005 எவ் | 14057 ஏ |
| 14083 ஏ | 14083 பி |
| 14083 சி | 14083 டி |
| 14083 ஈ | 14083 எவ் |
| 14087 ஏ | 14087 பி |
| 14101 ஏ | 14102 ஏ |
| 14102 பி | 14103 ஏ |
| 14103 பி | 14110 பி |
| 14137 ஏ | 14137 பி |
| 14139 ஏ | 14139 பி |
| 14139 சி | 14163 ஏ |
| 14163 பி | 14163 சி |
| 14163 டி | 14163 ஈ |
| 14163 எவ் | 14170 ஏ |
| 14170 பி | 14190 ஏ |
| 14190 பி | 14193 ஏ |
| 14193 பி | 14193 சி |
| 14195 ஏ | 14195 பி |
| 14214 ஏ | 14215 ஏ |
| 14216 ஏ | 14217 ஏ |
| 14217 பி | 14218 ஏ |
| 14219 ஏ | 14219 பி |
| 14220 ஏ | 14222 ஏ |
| 14222 பி | 14222 சி |
| 14222 டி | 14229 ஏ |
| 14229 சி | 14229 டி |
| 14229 ஈ | 14230 ஏ |
| 14230 பி | 14268 ஏ |
| 14270 ஏ | 14271 ஏ |
| 14276 ஏ | 14278 ஏ |
| 14278 பி | 14278 சி |
| 14279 ஏ | 14280 ஏ |
| 14280 பி | 14288 ஏ |
| 14289 ஏ | 14289 பி |
| 14290 ஏ | 14290 பி |
| 14291 ஏ | 14291 பி |
| 14291 சி | 14292 ஏ |
| 14292 பி | 14292 சி |
| 14292 டி | 14294 ஏ |
| 14294 பி | 14295 ஏ |
| 14315 ஏ | 14315 பி |
| 14315 சி | 14315 டி |
| 14315 ஈ | 14324 ஏ |
| 14324 பி | 14324 சி |
| 14324 டி | 14324 ஈ |
| 14324 எவ் | 14325 ஏ |
| 14325 பி | 14325 சி |
| 14325 டி | 14325 ஈ |
| 14326 ஏ | 14326 பி |
| 14329 ஏ | 14329 பி |
| 14329 சி | 14333 ஏ |
| 14333 பி | 14333 சி |
| 14367 ஏ | 14371 ஏ |
| 14371 பி | 14371 சி |

(ச)

### கோப்பாய்

| | |
|---|---|
| 150896 ஏ | 150896 பி |
| 159872 ஏ | 159872 பி |
| 162926 ஏ | 162926 பி |
| 162926 சி | 162926 டி |
| 163677 ஏ | 163677 பி |
| 163677 சி | 163793 ஏ |
| 163798 ஏ | 168266 ஏ |
| 168266 பி | 168295 ஏ |
| 168295 பி | 168352 ஏ |
| 168352 பி | 168352 சி |
| 168353 ஏ | 168353 பி |
| 168353 சி | 168353 டி |
| 168382 ஏ | 168382 பி |
| 170443 ஏ | 170443 பி |
| 170443 சி | 170443 டி |
| 170443 ஈ | 170475 ஏ |
| 170489 ஏ | 170489 பி |
| 170564 ஏ | 170564 பி |
| 170564 சி | 170565 ஏ |
| 170565 பி | 170566 ஏ |
| 170566 பி | 170619 ஏ |
| 170619 பி | 170619 சி |
| 170628 ஏ | 170628 பி |
| 170628 சி | 173205 ஏ |
| 173230 ஏ | 173266 ஏ |
| 173266 பி | 173266 சி |
| 173275 ஏ | 173275 பி |
| 173294 ஏ | 173321 ஏ |
| 173336 ஏ | 173336 பி |
| 173363 ஏ | 173374 ஏ |
| 173947 ஏ | 173947 பி |
| 173949 ஏ | 173968 ஏ |
| 173968 பி | 173983 ஏ |
| 173984 ஏ | 173984 பி |
| 173984 சி | 173984 டி |
| 173984 ஈ | 173984எவ் |
| 174010 ஏ | 174011 ஏ |
| 174949 ஏ | 174050 ஏ |
| 174068 ஏ | 174068 பி |
| 174072 ஏ | 174077 ஏ |
| 174088 ஏ | 174088 பி |
| 174095 ஏ | 174095 பி |
| 174095 சி | 174211 ஏ |
| 174213 ஏ | 163551 ஏ |
| 163551 பி | 163551 சி |
| 168479 ஏ | 67479 பி |
| 173656 பி | 173657 ஏ |
| 173657 சி | 175221 ஏ |
| 175221 பி | |

### நல்லூர்

| | |
|---|---|
| 144848 ஏ | 145650 ஏ |
| 157027 ஏ | 157162 ஏ |
| 157444 ஏ | 157444 பி |
| 157444 சி | 157444 டி |
| 157444 ஈ | 157446 ஏ |
| 157446 பி | 157446 சி |

| | |
|---|---|
| 157446 டி | 157528 ஏ |
| 167614 ஏ | 167614 பி |
| 177773 ஏ | 167774 ஏ |
| 170800 ஏ | 170931 ஏ |
| 170947 ஏ | 170947 பி |
| 171206 ஏ | 171524 ஏ |
| 171554 ஏ | 171570 ஏ |
| 171575 ஏ | 171627 ஏ |
| 173996 ஏ | 174015 ஏ |
| 174015 பி | 174015 சி |
| 174057 ஏ | 174057 பி |
| 174065 ஏ | 174065 பி |
| 174065 சி | 174098 ஏ |
| 174098 பி | |
| 174137 ஏ | 174137 பி |
| 174143 ஏ | 174156 ஏ |
| 174159 ஏ | 174168 ஏ |
| 174172 ஏ | 174172 பி |
| 174178 ஏ | 174178 பி |
| 174178 சி | 174184 ஏ |
| 164184 பி | 174184 சி |
| 174184 டி | 174186 ஏ |
| 174188 ஏ | 174188 பி |
| 174193 ஏ | 174193 பி |
| 174196 ஏ | 174197 ஏ |
| 177032 ஏ | 177033 ஏ |
| 177033 பி | 177043 ஏ |
| 150079 ஏ | 150079 பி |
| 163256 ஏ | 163256 பி |
| 163603 ஏ | 163603 பி |
| 163603 சி | 166037 ஏ |
| 166037 பி | 166037 சி |
| 166207 ஏ | 166207 பி |
| 166207 சி | 166207 டி |
| 166316 பி | 166316 சி |
| 168759 ஏ | 168759 பி |
| 168867 ஏ | 172082 ஏ |
| 172082 சி | 173538 ஏ |
| 173553 ஏ | 173553 பி |
| 173711 ஏ | 173729 ஏ |
| 173970 ஏ | 175236 ஏ |
| 175236 பி | 175236 சி |
| 175236 டி | 175246 ஏ |
| 175290 ஏ | 175292 ஏ |
| 175355 ஏ | 175373 ஏ |
| 175401 ஏ | |

### சண்டிலிப்பாய்

| | |
|---|---|
| 170329 ஏ | 170329 பி |
| 173080 ஏ | 173081 ஏ |
| 173081 பி | 175046 ஏ |
| 175904 ஏ | 175904 பி |
| 175904 சி | 175904 டி |
| 175986 ஏ | |

### தெல்லிப்பழை

174944 ஏ

### உடுவில்

| | |
|---|---|
| 157407 ஏ | 167566 ஏ |
| 167566 பி | 167566 சி |
| 167566 டி | 167575 ஏ |
| 167628 ஏ | 167628 பி |
| 167650 ஏ | 170663 ஏ |
| 171265 ஏ | 173917 ஏ |
| 173917 பி | 173930 ஏ |
| 173932 ஏ | 173932 பி |
| 173954 ஏ | 172954 பி |

(6ம் பக்கம் பார்க்க)

இம் மாதம்24ந்திகதி வெளியிடப்பட்ட பட்டியலின்படி வெளிமாவட்டங்களுக்குப் பயணம் செய்ய அனுமதி வழங்கப்பட்டவர்களது இலக்கங்கள் பிரதேச செயலக ரீதியாகத் தரப்படுகின்றன.

### சங்கானை

| | |
|---|---|
| 171261 ஏ | 160532 ஏ |
| 160532 பி | 166802 ஏ |
| 166803 ஏ | 172935 ஏ |
| 172935 பி | 172970 ஏ |
| 174865 ஏ | |

### யாழ்ப்பாணம்

| | |
|---|---|
| 170667 ஏ | 170667 பி |
| 170667 சி | 171263 ஏ |
| 171563 ஏ | 177104 ஏ |
| 166316 ஏ | 166326 ஏ |
| 166326 பி | 171747 ஏ |
| 171747 பி | 171747 சி |
| 171888 ஏ | 171888 பி |
| 173591 ஏ | 173591 பி |
| 173690 ஏ | 173694 ஏ |
| 173694 பி | 173696 ஏ |
| 173778 ஏ | 173778 பி |
| 173778 சி | 175214 ஏ |


ஸ்ரீசெல்வா
(யாழ்ப்பாணம்)
முரளி, நெப்போலியன்
நடித்த
'மனுநீதி'
புதிய வெளியீடு
(CD பிரதி)
(பு.நே) 10.30, 2.00


## பிரிவுத்துயர் பகிர்வு

### வினாசித்தம்பி சிவலோகநாதன்

உசன் மிருசுவிலைச் சேர்ந்தவினாசித்தம்பி சிவலோகநாதன் 25. 12. 2000 அன்று கொழும்பில் காலமானார்.

இறுதிக் கிரியைகள் கொழும்பில் நடைபெறும்

தகவல்
த. கமலாதேவி
(சகோதரி)

### கார்த்திகேசு ஆறுமுகம்

அல்வாய் வடக்கைப் பிறப்பிடமாகவும் யாழ்ப்பாணத்தில் வசித்தவருமான கார்த்திகேசு ஆறுமுகம் 25. 12. 2000 அன்று காலமானார்.

இறுதிக் கிரியைகள் நேற்று நடைபெற்றன.

தகவல்
குடும்பத்தினர்

### பஞ்சாட்சரம் விக்கினேஸ்வரன்

ஆனைப்பந்தியைச் சேர்ந்த பஞ்சாட்சரம் விக்கினேஸ்வரன் 24.12.2000 அன்று லண்டனில் காலமானார்.

இறுதிக்கிரியைகள் லண்டனில் நடைபெறும்.

தகவல்
நா. வரதராசா
(மாமன்)

### திருமதி நடராஜா சிவஞானபூங்கோதை

இணுவிலைப்பிறப்பிடமாகவும் குப்பிழான் தெற்கை வசிப்பிடமாகவும் கொண்ட நடராஜா சிவஞான பூங்கோதை நேற்றுக் காலமானார்.

அன்னாரின் பூதவுடல் இன்று பிற்பகல் 2 மணிக்கு தகனம் செய்யப்படும்.

குப்பிழான் தெற்கு,
ஏழாலை.

தகவல்
ந. சிறிநாத்
கிராமஉத்தியோகத்தர்
இணுவில் தென்மேற்கு(ஜே/188)

பொதுசன நூலகம் யாழ்ப்பாணம்

## இன்று ஒரு தகவல்

# முதலைக் கண்ணீர் எது?

ஒரு ஆள் இருந்தான். அவனுக்கு பலரிடம் பழக்கம் அதிகம். திடீரென்று ஒருநாள் அவன் செத்துப் போய்விட்டான். எல்லோருக்கும் ரொம்பக் கஷ்டமாய்ப் போயிற்று. சொந்தக்காரர்களெல்லாம் அழுதார்கள். சினேகிதர்களும் அழுதார்கள். கொஞ்ச நாளில் எல்லோரும் அந்தக் கவலையை மெல்ல மெல்ல மறந்து விட்டார்கள். ஒரு வருடம் ஆயிற்று. அதறகுப்பிறகும் ஒரு ஆள் இவனை நினைத்து அழுது கொண்டிருந்தார். இவ்வளவுக்கும் அவர் ஒரு சொந்தக்காரர் அல்ல, தெரிந்த ஒருத்தர்தான். மிகவும் நெருக்கமான சினேகிதர் போலிருக்கிறது.

'அய்யோ இப்படி மோசம் பண்ணிவிட்டு போய் விட்டியே' ஒருவருடமாக தினமும் அழுது கொண்டிருக்கிறார். பக்கத்திலே இருந்தவர்கள் ஆறுதல் சொன்னார்கள். 'கவலைப்படாதீர்கள் விதியை யாராலே மாற்ற முடியும்' மனதைத் தேற்றிக்கொள்ளுங்கள்' என்றார்கள்.

'அது எப்படி முடியும்? அந்த ஆள் என்னிடம் ஆயிரம் ரூபா கடன்வாங்கியிருந்தானே, அப்படியே மோசம் பண்ணிவிட்டுப் போய்விட்டானே, இனிமேல் யாரிடம் அதை வாங்கமுடியும்' என்று சொல்லி இவர் மறுபடியும் ஒ 'என்று அழ ஆரம்பித்து விட்டார். இந்த அழுகைக்கு அர்த்தம் என்ன? பாசத்தினால் வந்த அழுகையில்லை இது அழுகை வித்தியாசப் படுகிறமாதிரிக் கண்ணீரும் வித்தியாசப்படும். ஆனந்தக் கண்ணீர் இருக்கிறது, அழுகைக் கண்ணீர் இருக்கிறது. அதுபோல் முதலைக்கண்ணீரும் இருக்கிறது

பொய்யான அழுகை அழுகிறவனை 'முதலைக் கண்ணீர் வடிக்கிறான்' என்று சொல்லுவார்கள். முதலை ஏன் கண்ணீர்வடிக்கிறது தெரியுமா? அதுதான் இன்றைய தகவல்.

கடல் தண்ணீர் உப்பு என்பது எல்லோருக்கும் தெரிந்த விடயம்தான். ஒரு லீட்டர் கடல்தண்ணீரில்சுமாராக 35 கிராம் உப்பு கரைந்து இருக்கிறது. ஒருவர் கடல் தண்ணீரையே வேறு வழியில்லாமல் குடித்துக் கொண்டிருக்கிறார் என்றுவைத்துக்கொள்வோம். என்ன ஆகும்? கடல் வற்றிப் போய் விடுமா? இல்லை. இவருடைய உடம்பு வீணாகப் போய்விடும்.

கணிசமான அளவுக்கு சோடியம், பொட்டாசியம், கல்சியம் மாதிரியான உப்புக்கள் அவரின் உடம்புக்குள போய்விடும். உள்ளே போய் சும்மாவா இருக்கும்? இரத்தத்தில் கலந்து மிகவும் ஆபத்தில் போய் முடியும். நமது நிலைமை அப்படியென்றால் கடலிலே கிடக்கும் முதலையின்நிலைஎப்படித்தெரியுமா?

முதலை மட்டுமில்லை, கடலில் வாழ்கிற உயிரினங்கள் எல்லாம் ஆகாரத்தை சாப்பிடுகிற பொழுது, உணவுடன் கடல் தண்ணீரும் உள்ளே போகிறது. அதனால் கடல் நீரிலிருக்கும் உப்புக்களும் நிறைய உள்ளேபோய்விடும். அதிகப்படியான உப்பை வடிகட்டுவதற்கு அவைகளிடம் உப்புச் சுரப்பி என்ற ஒன்று இருக்கிறது. முதலைக்கு இச் சுரப்பிக்கான துவாரம் அதன் கண் ஓரத்தில் இருக்கிறது. அதன் வழியாக அதிகப்படியான உப்பு திரவமாக வெளி வருகிறது. பார்ப்பதற்கு இது கண்ணீர் மாதிரி இருக்கும். இந்த முதலைக் கண்ணீரை எடுத்துச் சோதனை செய்த போது கடல்நீரில் இருப்பதை விட மூன்று மடங்கு உப்பு அதிகமாக இருக்கிறதாம் முதலையின் இரத்தத்திலிருக்கிற உப்பை விடக் கண்ணீரில் இருக்கிற உப்பு ஐந்து மடங்கு அதிகமாயிருந்ததாம்.

ஆகவே முதலை அழுவது அதிகப்படியான உப்பை வெளியேற்றுவதற்கே! கவலையினால் அல்ல. சிலர் முதலை பிரார்த்தனை பண்ணுகிறது. மனம் கசிந்து கண்ணீரை வெளியே விடுகிறது என்பார்கள். அப்படிச் சொல்வது தப்பு அதனாலேதான் பொய்யாக அழுகிறவனை முதலைக் கண்ணீர் வடிக்கிறான் என்கின்றனர்.

ஜப்பானில் ஒரு கதையுண்டு மாமியார் செத்துப் போக மருமகள் துக்கம் தாளாமல் கேவிக்கேவி அழுதாள். பக்கத்து வீட்டார் ஐயோ பாவம்என்றுநினைத்து மாமியர் போனதில் உனக்கு இவ்வளவு வருத்தமா என்று கேட்கிறார்கள். அதற்கு அப் பெண், செத்ததை நினைத்து அழவில்லை. மறுபடியும் பிழைத்து விடுவாளோ' என்று நினைத்து அழுகிறேன்என்றாள் இந்தக் கண்ணீர் எந்த ரகம்?

தென்கச்சி கோ. சுவாமிநாதன்

# அ. இ. த. கா. தலைவர் வலி. மேற்கிற்கு விஜயம்

(சங்கானை)

அகில இலங்கை தமிழ் காங்கிரஸ் தலைவரும், யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான அப்பாத்துரை விநாயகமூர்த்தி கடந்த சனியன்று 12.30 மணியளவில் வலி. மேற்கு பகுதிக்கு திடீர் விஜயமொன்றை மேற்கொண்டார்.

சித்தன்கேணி கல்விச்சமூகத்தின் ஏற்பாட்டில்சுப்றா கல்வி நிலையத்தில் நிறுவன ஊழியர்கள் ஆசிரியர்கள் மற்றும் அப்பகுதி மாணவர்களுடன் கலந்துரையாடிய அவர்மாணவர் எதிர்நோக்கும் பிரச்சினைகளைக் கேட்டறிந்தார்.

அவ்வேளையில்,

★ சுழிபுரம் விக்ரோறியா கல்லூரியில் உயர்தர கலைப் லான மின்வெட்டு.

★ ஊரடங்கு நேரத்தினைக் குறைத்தல். போன்ற விடயங்கள் மாணவர்களால் எடுத்துரைக்கப்பட்டது.

இவைகளை உன்னிப்பாக கேட்டறிந்த விநாயகமூர்த்தி எம்.பி. சம்பந்தப்பட்ட தரப்பினருடன் தொடர்பு கொண்டு இப் பிரச்சினைகளை தீர்க்க வழிவகை செய்வதாக உறுதியளித்தார்.

(உ-ப-18)

# வீதி திருத்தம்

(கல்வயல்)

வண்ணார்பண்ணைமேற்கு அரசடி வீதியாழ். மாநகர சபையினரால் சீர் திருத்தப்

## வடக்கு - கிழக்கின்

# ஏகப் பிரதிநிதிகள் புலிகளே

# கட்சியின் நிலைப்பாடு அதுவே

## அ. இ. த. காங்கிரஸ் தலைவர் வலியுறுத்து

(அரியாலை)

வடக்கு- கிழக்கின் ஏகப்பிரதிநிதிகள் தமிழீழ விடுதலைப் புலிகளே என்பதில் உறுதியான நம்பிக்கை கொண்டுள்ள எமது கட்சி, இந்நிலைப்பாட்டையே தொடர்ந்தும் வலியுறுத்தி வருகிறது.

புலிகளுக்கு முட்டுக்கட்டையாக நாம் ஒருபோதும்செயற்படப்போவதில்லை.

இவ்வாறு அகில இலங்கை தமிழ் காங்கிரஸ் தலைவர் அப்பாத்துரை விநாயகமூர்த்தி கடந்த ஞாயிற்றுக்கிழமை, குளப்பிட்டி உயரப்புலம் ஆனைக்கோட்டையிலுள்ள அலுவலகத்தில் கட்சி உறுப்பினர்களைச் சந்தித்து, கட்சியின் எதிர்காலத் திட்டங்கள் தொடர்பாக அவர் ஆலோசனை நடத்துகையில், தெரிவித்தார்

அவர் மேலும் குறிப்பிடுகையில் இலங்கையில் சமாதானம் ஏற்பட வேண்டுமாயின வடக்கு - கிழக்கில் நிலவும் பிரச்சினைக்கு கௌரவமான தீர்வை ஏற்படுத்த வேண்டும் என்று குறிப்பிட்டார்.

தொடர்ந்தும் கூறுகையில், உடனடி போர் நிறுத்தத்திற்கு தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் வேலுப்பிள்ளைபிரபாகரன் அழைப்பு விடுத்துள்ளார்.

இச்சந்தர்ப்பத்தை நல்ல முறையில் ஏற்று சுமுகமான சூழ்நிலை உருவாக்கப்பட வேண்டும்.

கடந்த பொதுத்தேர்தலின் பின் இன்று கட்சி உறுப்பினர்களைச் சந்திக்கும் வாய்ப்பு கிட்டியுள்ளது.

இந்த நேரத்தில் நான் கூறுவது என்னவென்றால், மக்கள் எம்மை தெரிவு செய்து பாராளுமன்றம் அனுப்பியிருப்பது வாளாவிருப்பதற்கல்ல.

தொடர்ந்தும் உறுதியாகச் செயற்பட்டு மக்களின் அபிலாஷைகளைப் பூர்த்தி செய்ய வேண்டியது எமது கடமையாகும் என்று தெரிவித்துள்ளார்.

(உ-106)

# புதிய கல்வியாண்டு ஆரம்பம்

வந்தாறுமூலையில் அமைந்துள்ள கிழக்குப் பல்கலைக் கழகத்தின்புதிய கல்வியாண்டு எதிர்வரும் ஜனவரி மாதம் மூன்றாம் திகதி ஆரம்பமாகவுள்ளது.

அதேவேளை விடுதி வசதி தேவையானோர் ஜனவரி 2 ஆம் திகதி மாலை 4.00 மணிக்குமுன்னர் சமுகமளிக்குமாறு பல்கலைக்கழகப் பதிவாளர் தெரிவித்துள்ளார்.

(ச-111)

## யாழ். வைத்தியசாலையில்

# அவசர சிகிச்சை அனுமதி அறை திறந்து வைப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ். போதன வைத்திய சாலையில், புதிதாக விஸ்தரிக்கப்பட்ட அவசர சிகிச்சைப் பிரிவின் அனுமதி அறை நேற்றையதினம், வைத்தியசாலையின் பணிப்பாளர் செல்வி கனகரட்ணம் நவமலரினால் திறந்துவைக்கப்பட்டது.

இதனால் இப்பகுதியில் நிலவிவந்த இடப்பற்றாக் குறை ஓரளவேனும் நிவர்த்தி செய்யப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது.

இப் பகுதியில் முன்பு ஒரு வரை மட்டுமே அனுமதிக்கக் கூடிய வசதிகள் காணப்பட்டமையும், தற்போது ஒரே தடவையில் 4 பேரை அனுமதிக்கக் கூடிய அளவு விஸ்தரிக்கப் பட்டிருக்கின்றமையும் குறிப்பிடத்தக்கது

இப்பகுதியில், மினி சத்திர சிகிச்சைக்கூடமும் விஸ்தரிக்கப்படுகின்ற போதிலும் நவீனரக வைத்திய உபகரணங்கள் இல்லாமை, தொடர்ந்தும் பெருங்குறையாகவே உள்ளது.

(உ-12)

# ஐ. தே. கட்சி சதி முயற்சி, அமைச்சர் மகிந்த தகவல்

(கொழும்பு)

பாரிஸில் நடைபெற்ற இலங்கைக்கு உதவி வழங்கும் நாடுகள் குழுவின் உச்சிமாநாட்டின்போது இலங்கைக்கு உதவிவழங்க வேண்டாம் என்று கேட்டுக்கொள்ளும் சதி முயற்சி ஒன்றை ஐக்கிய தேசியக்கட்சி இரகசியமாக மேற்கொண்டதான தகவல்களை அமைச்சர் மகிந்த விஜயசேகரா வெளியிட்டிருக்கிறார்.

மேற்படி விஜயம் தொடர்பான கடிதம் ஒன்றை ஐக்கிய தேசியக்கட்சி பாராளுமன்ற உறுப்பினர் டாக்டர்ஜெயலத் ஜெயவர்த்தனா இலங்கை அபிவிருத்தி அமைச்சில் கையளிக்க முயன்றதாகவும் அதே சமயம் கூட்டம் நடைபெறும் உலக வங்கி அலுவலகத்திற்கு முன்னால் டாக்டர் ஜெயவர்த்தனா தலைமையிலான குழு ஒன்று ஆர்ப்பாட்டம் நடத்த முயன்றதாகவும். அதனைத் தான் தலையிட்டு தடுத்ததாகவும் அமைச்சர் விஜயசேகரா மேலும் தெரிவித்துள்ளார் அவர் அந்தச் சமயம் சுற்றாடல் மாநாடு ஒன்றில் கலந்துகொள்வதற்காக பாரிஸ் சென்றிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. தற்போது ஐக்கிய தேசியக் கட்சியின் இவ்வாறான சதிச் செயல்கள் மெல்ல மெல்ல கசியத் தொடங்கியுள்ளன.

(4)

## ஸ்ரான்லி வீதி,

# வியாபார நிலையங்கள் விரைவில் வழமைபோல் இயங்க ஏற்பாடு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் ஸ்ரான்லி வீதியில், பாதுகாப்பு காரணங்களுக்காக மூடப்பட்டிருக்கும் பகுதியில் உள்ள சுமார் 110 வியாபார ஸ்தாபனங்களை மீண்டும் வழமை போல் செயற்பட உரிய நடவடிக்கை எடுப்பதாக அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா உறுதியளித்துள்ளார்.

யாழ் வணிகர் கழக உறுப்பினர்கள் கடந்த 25 ஆம் திகதி அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவை ஈ.பி.டி.பியின்யாழ்தலைமைச்செயலகத்தில்நேரடியாகசந்தித்துநீண்டகாலமாக இயங்காதிருக்கும் மேற்படி வர்த்தக நிலையங்கள் குறித்தும். இதனால் உரிமையாளர் அடைந்திருக்கும் பின்னடைவுகள் குறித்தும் விபரமாக எடுத்துரைத்தனர்.

இதனைச் செவிமடுத்த அமைச்சர் டக்ளஸ் மேற்கண்ட உறுதிப்பாட்டினை வழங்கினார்.

இச்சந்திப்பின்போது, கொழும்பில் இருந்து பாதுகாப்பு காரணங்களுக்காக தடைசெய்யப்பட்ட பொருட்கள் தவிர்ந்த ஏனைய பொருட்களை பாதுகாப்பு அமைச்சரின் அனுமதியின்றி சுயாதீனமாக குடாநாட்டிற்கு எடுத்துவருவது,

மற்றும் கொழும்பில் இருந்து பொருட்களை எடுத்துவர வடக்கு புனர்வாழ்வு புனரமைப்பு அதிகார சபையினரால் கப்பல்களை வாடகைக்கு அமர்த்துதல் போன்ற செயற்பாடுகளுக்கும் நடவடிக்கை எடுக்கவுள்ளதாக அமைச்சர் அறிவித்தார்.

அத்துடன், வாடகைக்கு அமர்த்தப்படும் கப்பல்களில் ஏற்றப்படும் பொருட்களிற்கு காப்புறுதி செய்தல், ஐ சி ஆர் சியின் வழித்துணை என்பவற்றுக்கு வர்த்தகர்களினால் நடவடிக்கை எடுக்கப் படவுள்ளதாகவும்,

வர்த்தகவிருத்தியை நோக்காக கொண்டு வங்கிக்கடன்களை வழங்கவும், கடந்த காலங்களில்பொருட்களை ஏற்றிவந்த எம்.வி அஸ்ரோறியா, பிறின்சஸ்காஷ், மேஷ் உகன கப்பல்கள் முற்றாக பொருட்களுடன் அழிவுற்ற போது ஏற்பட்ட இழப்புக்களுக்கு உரிய நஷ்டஈடுகளை உரியவர்களுக்கு வழங்கவும்,

வங்கிகள் மூலம் குடாநாட்டு நகைவர்த்தகர்களுக்கு பிஸ்கட் பவுண்களை வழங்கவும் நடவடிக்கை எடுக்கப் படவுள்ளதாகவும் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்தார்.

(உ)

# முன்பள்ளி ஆசிரியர் கூட்டம்

(யாழ்ப்பாணம்)

வலி கிழக்கு முன்பள்ளி ஆசிரியர்களுக்கான கூட்டம் நாளை மறுதினம் 29ம் திகதி பிற்பகல் 2.00 மணியளவில் நீர்வேலி பிரதேச சபை அலுவலக மண்டபத்தில் இடம் பெறவுள்ளது

முன்பள்ளி ஆசிரியர் சங்கத் தலைவி ஞானேஸ்வரி தலைமையில் மேற்படி நிகழ்வு இடம் பெறவுள்ளது.

(க)

# செய்தித் துளிகள்

## சுகாதார தொண்டர் கூட்டம்

(மந்திகை)

யாழ். மாவட்ட சுகாதாரத் தொண்டர்களுக்கான கூட்டம், இன்று காலை 10.00 மணிக்குடி எம்.ஐ.கல்விநிலையத்தில் நடைபெறவுள்ளது.

மேற்படி கூட்டத்தில் யாழ். மாவட்ட வைத்தியசாலைகளில் பணிபுரியும் சுகாதாரத் தொண்டர்களுக்கான நிரந்தர நியமனம் தொடர்பாக கலந்துரையாடப்படும்.

அதேவேளை, புதிய அங்கத்தவர்களுக்கான அங்கத்துவ விண்ணப்பப்படிவங்களும் அங்கு வழங்கப்படவுள்ளமையும்குறிப்பிடத்தக்கது.

(ச-23-111)

## டிப்ளோமா கற்கைநெறி

(யாழ்ப்பாணம்)

மட்டக்களப்பு சுவாமி விபுலானந்த இசை நடனக் கல்லூரியில் இசை, நடனத்துறை நான்கு ஆண்டுகால டிப்ளோமாகற்கை நெறிக்கு(2001ஆம் ஆண்டு) மாணவர்களைச் சேர்த்துக்கொள்வதற்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளதாக இந்துசமய கலாசார அலுவல்கள் திணைக்கள பணிப்பாளர் சாந்தி நாவுக்கரசன் தெரிவித்துள்ளார்.

இக்கற்கை நெறியை மேற்கொள்பவர்கள் வாய்ப்பாட்டு வயலின், வீணை, மிருதங்கம் ஆகிய நான்கு பாடங்களில் ஒன்றினை முதன்மைப் பாடமாக தெரிவு செய்யவேண்டும்.

விண்ணப்பங்களை அடுத்த பெப்ரவரி மாதம் 9 ஆம் திகதிக்கு முன்னர் அனுப்பி வைக்கப்பட வேண்டும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(உ)

## கல்விச் சுற்றுலா

(சங்கானை)

சித்தன்கேணி 'சுப்றா' கல்வி நிலைய மாணவர்கள் கல்விச் சுற்றுலா ஒன்றைஅண்மையில் மேற்கொண்டனர்.

சமூகக் கல்விப் பாடத்திற்குத் துணை செய்யும் வகையில் மேற்கொள்ளப்பட்ட இச் சுற்றுலாவில் அண்மையில் புனரமைக்கப்பட்ட சங்கரத்தை முதலியார் குளம் உள்ளிட்ட பலவிவசாயப் பிரதேசங்களை பார்வையிட்டு, அவற்றுக்கான விளக்கங்களையும் பெற்றுக் கொண்டனர்.

தற்போதைய கல்வித் திட்டத்திற்கமைய இவ்வாறான கல்விச் சுற்றுலாக்கள் மேற்கொள்ளப்படுகின்றமை பாராட்டுதற்குரியதே.

[ச-ப-18]

## புதிய கிளைகள் அமைப்பு

(கல்வயல்)

தென்மராட்சி கிழக்கு கொடிகாமம் பல நோக்குக் கூட்டுறவுச்சங்கம்வடமராட்சியில் மேலும் புதிதாக இரண்டு கிளைகளைத் திறந்துள்ளது.

அத்தாய் பகுதியிலும் மற்றும் குஞ்சர் கடை வைரவர் கோவிலுக்கு அண்மையிலும் இடம் பெயர்ந்த பாவனையாளர் நன்மை கருதி அவ் இரு கிளைகளும் அமைந்துள்ளன.

அதேவேளை, வலிகாமம், யாழ்ப்பாணம், நல்லூர் ஆகிய இடங்களில் மேற்படி சங்கம் எதுவித கிளைகளையும் திறக்காததையிட்டு அப்பகுதி வாழ் பொதுச்சபை அங்கத்தவர்கள் மற்றும் குறித்த சங்கத்துடன் தொடர்புடைய மக்கள் அதிருப்தி அடைந்துள்ளனர்.

(ச-111)

## பிள்ளையார் பெருங்கதை

(யாழ்ப்பாணம்)

அரியாலை மேற்கு வெட்டுக்குளம் அருள்மிகு ஸ்ரீபுவனேஸ்வரி அம்பாள் ஆலய பரிவார மூர்த்தியாம் விநாயகர் ஆலயத்தில் இம் மாதம் 11 ஆம் திகதி ஆரம்பமாகிய பிள்ளையார் பெருங்கதை தொடர்ந்து 31 ஆம் திகதி வரை நடைபெறவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதேவேளை டிசம்பர் 31 ஆம் திகதியிலிருந்து ஜனவரி 9 ஆம் திகதி வரை திருவெம்பாவை நடைபெற்று 10 ஆம் நாள் திருவாதிரை உற்சவம் அம்பாள் திருவீதி உலாக் காட்சி இடம் பெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

[ச]

## ஊழியர்க்கு இடைக்காலப் படி

(கல்வயல்)

சாவகச்சேரி பல நோக்குக் கூட்டுறவுச் சங்க ஊழியர்களுக்கு மூன்று மாதங்களுக்கான இடைக்காலப்படிவழங்கப்பட்டுள்ளது.

இடம் பெயர்ந்த நிலையிலும், ஊழியர் மிகவும் பொறுப்புணர்வுடன் செயற்பட்ட காரணத்தினாலேயே இப்படியை வழங்க முடிந்ததாகவும்,

ஊழியர்களின் செயற்பாட்டைப் பொறுத்து ஏனைய மாதங்களுக்கான இடைக்காலப்படி வழங்கப்படும் எனவும் மேற்படி சங்க வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

[உ-111]

## மதுஒழிப்பு விழிப்புணர்வு

(யாழ்ப்பாணம்)

யாழ். பல்கலைக்கழக சமுதாய மருத்துவத்துறை மாணவர்களின் ஏற்பாட்டில், கொக்குவில் லயன்ஸ் கழக அனுசரணையுடன் நாளை வியாழக்கிழமை, மது ஒழிப்புச் சம்பந்தமான விழிப்புணர்வு நிகழ்வுகள் கட்டுடை, சாவற்காடு ஆகியஇருஇடங்களிலும் இடம்பெறவுள்ளன.

மது ஒழிப்புச் சம்பந்தமான விழிப்புணர்வுக் கருத்தரங்கு மற்றும் அதனோடு தொடர்புடையவீடியோபடக்காட்சி, தெருக்கூத்து ஆகியன இந் நிகழ்வில் இடம் பெறவுள்ளது.

(உ)

## ஒளிவிழா

(நெடுந்தீவு)

நாளை வியாழக்கிழமை மு.ப. 9 மணியளவில் நெடுந்தீவு பிரதேச சபையில் ஒளி விழா நடைபெறவுள்ளது.

அருட்சகோதரி றொட்றிக்கோ தலைமையில் இடம் பெறும் இவ்விழாவில் இப்பகுதியைச் சேர்ந்த அனைத்து மக்களையும் கலந்துகொண்டு சிறப்பிக்குமாறு நெடுந்தீவ பிரதேசசபைத்தலைவர் புலவர் ஏ.டபிள்யு.அரியநாயகம் கேட்டுள்ளார்.

(உ-82)

## ஞானச்சுடர் வெளியீடு

(கல்வயல்)

தொண்டைமானாறு செல்வச் சன்னிதியான் ஆச்சிரம சைவ கலை பண்பாட்டுப் பேரவை, பிரதி வெள்ளி தோறும் நடத்தும் வாராந்த நிகழ்ச்சித் தொடரில் நாளை மறுதினம் 29 ஆம் திகதி காலை 10.30 மணிக்கு 'ஞானச் சுடர்' சஞ்சிகையின் மார்கழிமாத வெளியீடு இடம்பெறவுள்ளது.

ஆச்சிரம மண்டபத்தில் நடைபெறும் இந்நிகழ்வில் சஞ்சிகையின் வெளியீட்டு உரையை சிவஸ்ரீ. கு தியாகராசசர்மாவும், மதிப்பீட்டுரையை யாழ். கனகரத்தினம் மத்திய மகாவித்தியாலய ஆசிரியர் மதுரகவி காரை எம். பீ. அருளானந்தமும் நிகழ்த்துவார்.

(ச-111)

# நெருந்தீவு மேற்கு மக்களின், குறைகளை வெளிக்கொணர்ந்த பயனுள்ள குறைகேள் செயலமர்வு

(நெடுந்தீவு)

நெடுந்தீவு மேற்கு பகுதிக்கான குறைகேள் செயலமர்வு கடந்தஞாயிறன்றுபி.ப.3.00 மணியளவில் நெடுந்தீவு மேற்கு சைவப்பிரகாச வித்தியாலயத்தில் நெடுந்தீவு பிரதேசசபைத் தலைவர் புலவர் ஏ.டபிள்யு. அரியநாயகம் தலைமையில் நடைபெற்றது.

சம்பந்தப்பட்ட பகுதியைச் சேர்ந்த பெருந்தொகை மக்கள் குறைகேள்செயலமர்வில் கலந்து கொண்டு, தமது பிரதேச அபிவிருத்திக்கு தடையாகவுள்ள காரணங்கள் மற்றும் நடை முறைப்படுத்தப்படும் திட்டங்களில் காணப்படும் குறைபாடுகள் குறித்து விளக்கமாகவும் விரிவாகவும் எடுத்துக் கூறினர்.

நெடுந்தீவு மேற்குப் பகுதிக்கு மின்சாரம் வழங்கப்படாமை, தொலைபேசி வசதி செய்து கொடுக்கப்படாமை, மருந்தகம் இன்மை குடிநீருக்கான தட்டுப்பாடு போன்ற விடயங்களை மக்கள்முக்கியத்துவம் கொடுத்து பிரஸ்தாபித்தனர்

இவற்றை கருத்தில் எடுத்த நெடுந்தீவு உதவி அரசாங்க அதிபர் ஜே.எக்ஸ்.செல்வநாயகம், ஒவ்வொரு கோரிக்கை தொடர்பான காரண காரியங்களைகண்டறிந்து, பொதுமக்களுக்கு விளக்கமளித்து, அவற்றை தீர்ப்பதற்கான வழிவகைகள் தொடர்பாக பொதுமக்களுடன் ஆலோசனை நடத்தியதுடன், அவர்களுடைய நியாயமான கோரிக்கைகளுக்கு விரைவில் தீர்வு கிடைக்கும் என உறுதியளித்தார்.

(உ-82)

## பதவி வெற்றிடம் நிரப்பப்பட்டது

(புலோலி)

வெற்றிடமாகவிருந்த யாழ். கால்நடை வைத்தியசாலை அத்தியட்சகர் பதவியைக் கால்நடை உற்பத்தி சுகாதாரத் திணைக்களம் நிரப்பியுள்ளது.

இவ்வைத்தியசாலை அத்தியட்சகர் பதவி வெற்றிடமாக இருந்தமையால் இக்கால்நடை வைத்தியசாலை நடவடிக்கைகள் ஸ்தம்பித்திருந்தன.

வைத்தியகலாநிதி எம். தங்கராஜாவுக்கு மீள் நியமனம் வழங்கப்பட்டு யாழ். கால்நடை வைத்தியசாலை அத்தியட்சகராக நியமனம் பெற்று பொறுப்பேற்றுள்ளார். இதனையடுத்து யாழ். கால்நடை வைத்தியசாலை செயற்படத் தொடங்கியுள்ளது.

(உ-52)

## கிறிஸ்மஸ் ஒன்றுகூடல்

(ஈச்சமோட்டை)

யா/புனித பத்திரிசியார் கல்லூரியின் பழைய மாணவர்களுக்கான கிறிஸ்மஸ் ஒன்றுகூடல் விழா எதிர்வரும் 30 ஆம்திகதி இடம் பெறவுள்ளது

மேற்படி நிகழ்வில் கரோல் கானங்கள், சிறுவர் நிகழ்வுகள் என்பனவற்றுடன் மதிய போசன விருந்தும் இடம் பெறும்.

(ச-59)

## உழவு இயந்திரம் கொள்வனவு

(யாழ்ப்பாணம்)

பொது மக்களின் தேவை கருதி உழவு இயந்திரம் ஒன்று கொள்வனவு செய்யப்பட்டுள்ளதாக வேலணைப் பிரதேச சபை தலைவர் கருணாகரகுருமூர்த்தி தெரிவித்துள்ளார்.

(க)

## பழையமாணவர் சங்கம் செயலிழப்பு

(ஈச்சமோட்டை)

சுழிபுரம் மெய்கண்டான் மகாவித்தியாலய பழைய மாணவர் சங்கம் பல வருடங்களாக செயலிழந்திருப்பதாக அப்பகுதி பொது மக்களால் கவலை தெரிவிக்கப்பட்டுள்ளது.

(உ-59)

## நேர்முகப் பரீட்சை ஜனவரி முதல்வாரத்தில்

(கல்வயல்)

யாழ்ப்பாணம், வவுனியா, மட்டக்களப்பு ஆகிய தேசிய கல்வியியற் கல்லூரிகளுக்கு ஆசிரிய பயிலுநர்களைத் தெரிவு செய்வதற்கான நேர்முகப்பரீட்சைகள் நடைபெறவுள்ளன.

யாழ்ப்பாண மாவட்ட விண்ணப்பதாரிகளுக்கு எதிர்வரும் தைமாதம் 9, 10, 11, 12 ஆம் திகதிகளில் வலயம் ஒன்று கல்வித்திணைக்களத்தில் நடைபெறும் என்று நேர்முகப்பரீட்சைக் குழுவின் தலைவரான வவுனியா தேசிய கல்வியியற் கல்லூரிப் பீடாதிபதி எஸ். அழகரத்தினம் தெரிவித்துள்ளார்

அத்துடன், நேர்முகப் பரீட்சைக்கான கடிதங்கள் அனுப்பப்பட்டுள்ளதாகவும், கடிதம் கிடைக்காதோர் குறித்த திகதியில் நேர்முகப் பரீட்சைக்குழுவோடு தொடர்புகொண்டு, அவர்களது பெயர்கள் கணனிப் பதிவில் இருப்பின் நேர்முகப் பரீட்சைக்குத் தோற்ற முடியும் என்றும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

(ச-111)

## யாழ்ப்பாணத்தவர் எவரும் பங்கு கொள்ளவில்லை

(மல்லாகம்)

தேசிய இளைஞர் சேவை மன்றத்தினரால் யாழ். மாவட்ட ரீதியில் அண்மையில் நடத்திய தனிநடிப்பு, கிராமிய நடனம், நாட்டியம் முதலிய போட்டிகளில் கலந்து கொண்டு வெற்றியீட்டிய மாணவர்கள் தேசிய மட்டப் போட்டிகளில் பங்கு பற்றுவதற்குரிய வாய்ப்பை இழந்துள்ளனர்.

மேற்படி போட்டிகளில் முதல் இரு இடங்களைப் பெற்ற மாணவர்களுக்கு தேசியமட்டப் போட்டிகளில் பங்குபற்றுவதற்குரிய வாய்ப்பு வழங்கப்பட்டிருந்த போதும் போக்குவரத்துச் சீரின்மையால் அவர்கள் அப்போட்டிகளில் கலந்து கொள்ள முடியவில்லை.

அண்மையில் தேசியமட்டத்தில் இப்போட்டிகள் நடைபெற்று முடிந்தமை குறிப்பிடத்தக்கது.

(ச-ப-14)

## சங்கேழுழங்கு

### அதிகாரிகள் மனித நேயத்துடன் செயற்படுவார்களா? வாடிக்கையாளர் ஆதங்கம்

நான் தென்மராட்சிப்பகுதியில் இயங்கிய வங்கி ஒன்றின் வாடிக்கையாளன்.

எனக்கேற்பட்ட மிக அவசரமும் அவசியமுமான தேவை கருதி, தற்போது யாழ்ப்பாணத்தில் இயங்கும் அவ்வங்கியில் பணம் எடுப்பதற்காக பல மைல் தூரம் அலைந்து உலைந்து வங்கியைச் சென்றடைய சிறிது தாமதமாகிவிட்டது.

எனினும், வங்கிக்கடமைகள் முடிவடைவதற்கு சில நிமிடங்கள் முன்னதாகவே வங்கி அதிகாரி ஒருவரை அணுகி நான் வந்த காரணத்தை கூறினேன். இதற்கு ''வங்கி பதிவுகளை முடித்து விட்டோம். இருப்பினும் வங்கி முகாமையாளருடன் தொடர்பு கொண்டால் பணம் எடுக்கலாம்'' என அவ் அதிகாரி என்னை முகாமையாளரிடம் அனுப்பி வைத்தார்.

முகாமையாளரிடம் விடயத்தை கூறியதும், வானத்துக்கும் பூமிக்குமாய் துள்ளிக் குதித்தார். நான் ஏதோ செய்யக் கூடாத காரியத்தை செய்து விட்டது போல் தனது அதிகார வார்த்தைப் பிரயோகங்களை என்மீது விடுத்தார்.

எத்தனையோ குண்டு மழைகளுக்கால் தப்பி வந்த நான், இந்த வார்த்தை மழையால் மற்றவர்கள் முன் கூனிக்குறுகி விரக்தியுற்ற நிலையில் அவமானத்தோடு வீடு திரும்ப வேண்டியதாய் விட்டது.

நான் கூறவருவது என்னவென்றால், இடர்பாடுகள் இடப்பெயர்வுகள் என எத்தனையோ இன்னல்களை மக்கள் சுமந்து வாழும் இவ் வேளையில், சற்று மனிதாபிமானத்துடன் அதிகாரிகள் நடந்து கொண்டால் என்ன?

பொதுசன நூலகம் யாழ்ப்பாணம்

வாள்போல் பகைவரை அஞ்சற்க அஞ்சுக
கேள்போல் பகைவர் தொடர்பு
- குறள் -

**வலம்புரி**

## பருபாதகச் செயல்

மிருசுவில் பகுதியில் தமது வீடுகளைப் பார்க்கச் சென்ற எட்டுப் பேர் சடலமாக புதைகுழியிலிருந்து மீட்கப்பட்டுள்ளனர். இவர்கள் எண்மரும் காணாமல் போனமை குறித்து 'வலம்புரி' இம் மாதம் 22 திகதி ஆசிரியர் தலையங்கத்தில் எட்டுப் பேரும் எங்கே? என எழுதியிருந்ததுடன் தப்பி வந்தவரின் தகவலின்படி அவர்கள் எண்மரும் ஆபத்தில் சிக்கியுள்ளனர் எனவும் குறிப்பிட்டிருந்தது எனினும் யாழ்ப்பாணத்தில் இயங்கும் மனிதநேய அமைப்புகள் அது பற்றி எதுவும் அலட்டிக்கொள்ளவில்லை. காரணம் காணாமல் போயிருந்த எட்டுப்பேரும் ஏழைகளாயிற்று. யாழ்ப்பாணத்திலுள்ள மனிதநேய அமைப்புகளில் ஈவிரக்க மற்ற சுத்துமாத்துப்பேர் வழிகளே அங்கம் வகிக்கின்றனர் அவர்கள் பணம், படைத்த - உயர் அரச பதவியில் அல்லது ஏதோவொருவகையில்பிரபல்யம் பெற்றிருப்பவர்கள் விடயத்திலேயே அக்கறை காட்டுபவர்கள் மற்றும் படி மதுவும் மாமிசமும் வாகன சுகபோகமுமே அவர்களின் அனுபவிப்பாகும். இவை ஒரு புறமிருக்க புதைகுழியிலிருந்து சடலமாக மீட்கப்பட்ட எட்டுப் பேரில் ஐந்து வயதுப் பாலகனும் ஒருவன் என்பதை எண்ணும் போது பாதகர் கூட்டத்தில் நம் மண் சிக்குண்டு விட்டதென்பதையே உணர்த்தி நிற்கிறது. ஐந்து வயதுப்பாலகனை மிருசுவிலுக்குக்கூட்டிச் செல்வதன் மூலம் தான் ஒரு பெற்றார் என்பதையும், சாதாரண பொதுமகன் என்பதையும் நிரூபிக்கலாமென அந்தத் தந்தை எண்ணியிருக்கலாம் ஆனால் நடந்தது வேறு. நெஞ்சில் ஈரமில்லா வஞ்சகர் கூட்டம் ஈவிரக்கமின்றி ஐந்து வயதுப் பாலகன் உட்பட எண்மரையும் படுகொலை புரிந்து புதைத்துவிட்டது.

மறைத்துவிட முயன்ற மர்மத்தை தப்பி வந்த மகேஸ்வரன் துணிவுடன் தெரியப்படுத்தியதால் படையினரின் பாதகம் அம்பலத்துக்கு வந்தது.

எனவே இதுவிடயத்தில் யாழ்ப்பாணத்தில் இயங்கும் சகல மனிதநேய அமைப்புகளும் ஒன்றுசேர வேண்டும் ஐந்து வயதுப் பாலகனின் மரணம் குறித்துயாழ்ப்பாணத்தில் இயங்கும் சிறுவர் பாதுகாப்பு நிதியம் (ஐ-இ) உலகுக்கு உரத்தகுரலில் தெரியப்படுத்த வேண்டும் இதுவே மக்கள் விருப்பமாகும்.

# சிலந்தி வலைப் பின்னலில் 'வலம்புரி' சிக்காது

# சகோதரர் ஆரோனின் கூற்றுக்கு பதிலடி!

கடந்த 27-11-2000 அன்று 'வலம்புரி' பத்திரிகையில் சில கிறிஸ்தவ சபைகளின் மதம் மாற்றும் நடவடிக்கை மதவாதப் போருக்கு வழிகோலுமா என்ற தலைப்பில் 'விதுரன்' எழுதிய கட்டுரைக்கு பதில் அளிக்கும் விதத்தில் 17-12-2000 அன்று சகோதரன் ஆரோன் விடுத்த கணை 'வலம்புரி' பத்திரிகையில் பிரசுரமாயிற்று அக் கட்டுரையை மறுதலிக்கும் விதத்திலான கட்டுரை இங்கு பிரசுரமாகிறது: ஆரோக்கியமான கருத்து மோதல்களுக்கு களம் அமைக்க 'வலம்புரி' என்றுமே பின்னிற்காது. [ஆ-ர்]

17-12-2000 ஞாயிற்றுக்கிழமை விடிந்ததும் வலம்புரி பத்திரிகையை வழமை போலவே வாசிக்கத்தொடங்கினேன். அதில் வட்டுக்கோட்டைச் சகோதரரின் கணை என்ற பகுதி கிறிஸ்தவமதப் பிரச்சாரமாகவும், இந்து மதத் தூற்றுதலாகவும் அமைக்கப்பட்டிருக்கிறது. வலம்புரி பத்திரிகையின் ஆரம்பகால வாசகன் என்ற முறையில் வலம்புரி தொடர்ந்து இந்து, கிறிஸ்தவ மதக் கருத்துக்களுக்குச் சம வாய்ப்புத் தந்து வருவதை என்னால் நன்கு அறிந்து கொள்ள முடிந்தது.

ஆனால், அண்ணன் ஆரோன் வலம்புரி பக்கம் சாய்ந்துவிட்டது என்ற நுட்பமான உளவியல் ஆயுதத்தைப் பயன்படுத்தி இந்துக்களின் நியாயபூர்வமான கருத்துக்கள் வலம்புரிப் பத்திரிகையில் இடம்பெறுவதைத் தடுக்க முயல்கிறார் .போல் உள்ளது

அந்தச் சிலந்திவலைப் பின்னலில் வலம்புரி சிக்கிக்கொள்ளாமல் தொடர்ந்தும் யாழ் குடாவின் மைந்தர்களது நியாயபூர்வமான கருத்துக்களுக்கு இடம்கொடுக்க வேண்டுமென்று வேண்டிக்கொள்கிறேன். அண்ணன் ஆரோனின் கருத்துக்களைப் போலவே, எங்களுடைய கருத்துக்களும் மக்களைச் சென்றடைய உதவுமாறு பணிவுடனும், அன்புடனும் வேண்டிநிற்கிறேன்.

### பத்திரிகை சுதந்திரம்

பத்திரிகைஇன, மத, மொழி பேதமற்றது என்பதை எழுதியிருக்கும்அண்ணன்ஆரோன், அது நியாயபூர்வமானது, சுதந்திரமானது என்பதைக் கூறமறந்துவிட்டாராஅல்லது அதைமறைத்து விட்டாரா?

மிகவும் தந்திரமாக அண்ணன் ஆரோன் அவர்கள் சொற்களைப் பிரயோகித்திருக்கிறார். 'தன்மானத்துடன் வாழும் யாழ் மக்களை அற்பசலுகைகளுக்காக மதம் மாற்றமுடியாது' என்ற அலங்காரமான சொல்லோ வியம் இதற்குக் கட்டியம் கூறிநிற்கிறது. மதமாற்றம் செய்வதற்காகக் களத்திலே குதித்திருக்கும் மாற்றுமதச்சகோதரர்கள் அனைவரும் உளவியலில் நன்கு பயிற்சியளிக்கப்பட்ட பின்னரே இறக்கப்பட்டுள்ளார்கள் என்பதை அண்ணன் ஆரோனின்கணைநன்கு எடுத்து இயம்புகிறது.

மதமாற்றத்தை மனமாற்றம் என்ற சொல்லினுள் அடக்கிய சாதுரியமும் இதன் பாற்படுவதே.

அண்ணன் ஆரோன் தன்னுடைய கணையின் மூலம் தந்திரமாக மதப்பிரச்சாரம் செய்ததோடு மட்டுமின்றி 'ஊருக்குத் தான் உபதேசம் உனக்கல்ல' என்ற விதமாக, இந்துக்களின் நியாயமான கருத்துக்களை நடு நிலையில் நின்று வெளியிட்டமைக்காகப் பத்திரிகைமீது பழியும் சுமத்தியிருப்பது, வன்மையான கண்டனத்திற்குரியது.

### இரண்டு கன்னத்திலும் அறை

ஒரு கன்னத்தில் அடித்தால் மறு கன்னத்தையும் காட்டு 'என்று இயேசு கூறியது, மனிதனின் யதார்த்த வாழ்க்கைக்கு மிகவும் பொருத்தமாகத் திகழ்ந்து, கிறிஸ்தவர்களால் கடைப்பிடிக்கப்பட்டு வருகிறது என்று கூறிக்கொள்ளும் அண்ணன் ஆரோன், எதிராளி அடிக்காமலேயே இரண்டு கன்னத்திலும் அறை கொடுக்க முயன்று கொண்டிருக்கிறார் போலுள்ளது.

'மதரீதியானபிளவுகளின்றி வைராக்கியங்களின்றி கசப்புக்களின்றி' என்று கூறும் அண்ணன் ஆரோன் கிறிஸ்தவம் அதனைப் பின்பற்றுகிறதா என்பதைத் தெளிவாக்குவாரா? வீடு வீடாக, வீதி வீதியாக, அலைந்து, வெளிநாட்டில் தலைமை கொண்ட கிறிஸ்தவ சங்கங்களுக்குக் கணக்குக் காட்டுவதற்காக மதமாற்றம் செய்ய முனைவதற்கு விளக்கம் தர முனைவாரா? வைத்திய சாலைகளில் நோயாளிகளிடம் இந்துவசைபுரியும் மத போதகர்கள் அண்ணன் ஆரோனின் கூற்றுக்களின் முகமூடியைக் கிழிக்கிறார்கள். பாப்பரசர் மதவைராக்கியமும், கசப்பும், பிளவும் இல்லாமலா மதஅறுவடைக்கு அழைப்பு விடுத்தார். இவர்கள் எல்லோரும் யாழ்ப்பாணச் சுதேச இந்துக்களிற்கு 'மதப்பிளவுகளின்றி கசப்புக்களின்றி வைராக்கியங்கள் இன்றி' என முட்டாளாக்க முனைவது, சிரிப்பிற்கிடமானதே.

### குரு ஷேத்திரம்

குரு ஷேத்திரத்தில் சொற்போரோ, மற்போரோ, விற்போரோ செய்வது தன் நோக்கமல்ல என்று அண்ணன் கூறுவது பெரும்மர்மமாயிருக்கிறது, தங்களுடைய கொள்கைகள் மட்டும் யாழ் மக்களைச் சென்றடைந்தால் போதுமென்று அண்ணன் ஆரோன் நினைக்கிறாரா அல்லது குருஷேத்திரத்தில் இந்துக்களின் நியாயமான கருத்துக்கள் வெளிவந்தால் தங்கள் மதமாற்ற முயற்சிக்குப் பெரும் இடர் ஏற்படும் என்று அஞ்சுகிறாரா?

### கிறிஸ்தவ மதமாற்றம்

ஈழத்து வரலாற்றில் கிறிஸ்தவ மதமாற்றம் ஒன்றும் புதியதல்ல என்பதற்கு அண்ணன் ஆரோனே தக்க சான்று. சுதேச இந்துக்கள் அப்போது அந்நியரின் நேரடியான மதமாற்றத்தையும், இப்போது அந்நியர் கைப்பாவையான தமிழ்மதமாற்றிகளின் முயற்சியையும் ஒருங்கு எதிர்த்தே வருகிறார்கள், அந்நியர்கள்அன்று இந்துமதத்திற்கு எதிராக வெளியிட்ட வசைபாடும் நூல்களுக்கு சாட்டையடி கொடுப்பதற்காக ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் பெருமான் அவர்கள் வெளியிட்ட சுப்பிரபோதம், வச்சிர தாண்டம், சைவதூசண பரிகாரம் ஆகிய நூல்கள் அந்நிய கிறிஸ்தவரைக் கதிகலங்கடித்த வரலாற்றை அண்ணன் அரோன் அவர்கள் நினைத்து அச்சப்படுகிறாரா?

''வெறும் அரிசிக்கும் பருப்புக்கும், சீனிக்கும் மரம்விட்டு மரம் தாவும் குரங்கினைப் போல மதம் விட்டு மதம் தாவும்மக்களல்லகுடாநாட்டு மக்கள்'' என்று தன் உளவியலறிவைப் பயன்படுத்தி ஒரு போடு போட்டிருக்கிறார் அண்ணண் ஆரோன், ஆனால் மதம் விட்டு மதம்தாவ வைப்பதற்காக மத மாற்றிகள் தாங்களும் உபகாரச்சம்பளம் பெற்றுக் கொண்டு, மதம் மாறுபவர்களுக்கும் கைக்குள் வைப்பதை ''முழுப்பூசனிக் காயைச்சோற்றில் மறைப்பது போல'' அண்ணண் ஆரோன் அவர்கள் மறைக்க முயல்வது நகைப்புக்கிடமானது.

### சுயலாபம்

அந்நியர் ஆட்சிக்காலமாயினும் சரி இன்றைய யுத்த காலமாயினும் சரி, பணத்திற்காகவும், சில தன்மானங் கெட்ட திருமணங்களாலும், அற்பசலுகைகளுக்காகவுமே மதமாற்றம் நடந்து கொண்டிருக்கிறது என்பது நாம் கண்கூடாகக் கண்டு கொள்ளும் உண்மை. ''சுயலாபம்'' என்ற ஒரு தந்திரச் சொல்லை அண்ணன் ஆரோன் எழுதிவிட்டார் என்பதற்காக, தாங்கள் கடைப்பிடிக்கும் 'சுயலாபம்' கொள்கையை மற்றவர் மேல் இட்டுக்கட்ட முயல்கிறார் என்பதற்காக உண்மைகள் உறங்கிவிடப் போவதில்லை. பண்பாடு கலாச்சாரமும் தொன்மையும் மிக்க இந்துத்தாய் இப்போது தன்னை மிதிப்பவர்களிடம் பெறுமையுடன் தான் நடந்து கொள்கிறாள். ஆயினும் இந்த மிதித்தல், வஞ்சனைச் சொல், வசைமொழி மதமாற்றிகளால் தொடரப்படும் போது நிச்சயமாக ஒரு புரட்சி ஒரு மறுமலர்ச்சி ஏற்படப் போவதை நாம் இப்போதிருந்தே எதிர்பார்க்கத் தொடங்கலாம்.

### தமிழ்த் தொண்டு

அடுத்து அவுஸ்திரேலியாவிலிருந்து மதபோதகர் இந்தியாவிற்கு வந்த காரணத்தை அண்ணன் ஆரோன் நன்கு இட்டுக்கட்டிக் கூறியிச்ருகிறார். அந்நியராட்சிக் காலத்திலே ஒரு கால்டுவெல் பாதிரியார் ஒரு வீரமாமுனிவர், ஒரு தத்துவ போதிக சுவாமிகள் தமிழை வளர்க்கும் தொண்டு செய்யவா அந்நிய நாட்டிலிருந்து ஓடிவந்து தமிழ்கற்றார்கள்.

இல்லவே இல்லை. தமிழ்த் தொண்டு என்ற போர்வையில் தமிழ்நாட்டு சுதேச இந்துக்களை மதம்மாற்றித் தனித்துவத்தை அழிக்கவே வந்தார்கள். ஆனால் பரிதாபகரமாக சிவஞானமுனிவர் போன்ற சுதேச இந்துப் பெரியார்களினால் முறியடிக்கப்பட்டார்கள் அவ்வாறே அவுஸ்திரேலியப் பாதிரியாரும் மகன்மாரும் தொழுநோயாளிகளுக்குத் தொண்டு செய்யவா இந்துத்தேசமாகிய இந்தியாவிற்கு ஓடிவந்தார்கள். உலகில் எத்தனையோ பட்டினிச்சாவை, யுத்த அவலங்களை எதிர்நோக்கும் வறியநாடுகள் இருக்க, பழம் பெரும் இந்துக் கலாச்சாரப் பின்னணி கொண்ட இந்தியாவிற்கு அவர்களை வரத் தூண்டியது மதமாற்றத்தின் கண்கொண்ட பேராசையே தொழுநோயாளிகளுக்குச் சேவை என்ற போர்வைக்குள் மதமாற்றிகளாக இருந்த அவர்களை மகாத்மா காந்திக்கு ஒப்பிட்ட அண்ணன் ஆரோனின் பேதமை அண்ணல் மகாத்மாகாந்தியை அவமானப்படுத்திவிட வேண்டும் என அண்ணன் ஆரோன் திட்டமிட்டுள்ளாரோ எனத் திகைக்கவைக்கிறது.

மேலும் அண்ணன் ஆரோனின் நுட்பமான சொற்பிரயோகங்களை அவரின் நைச்சியமான எச்சரிக்கையை, பாரபட்சமானவசைபாடலை வலம்புரிப்பத்திரிகை வெளியிட்டு தன் நடுநிலை பிறழாத் தன்மையைப் பேணியது போலவே அதனால், இந்துக்களின் உள்ளம் புண்பட்டதையும், அவர்களின் நியாயங்களையும், கருத்துக்களையும் யாழ்குடாநாட்டு மக்கள் மத்தியில் கொண்டு செல்ல வேண்டும் என பணிவுடனும் அன்புடனும் வேண்டிக்கொள்கிறேன் வலம்புரி இன, மத, மொழி பேதங்களற்றது என்பதுடன் நியாயம் தவறாதது மக்கள் கருத்துக்களுக்கு இடமளிப்பது என்பதையும் நாம் பூரணமாக நம்பி நிற்கிறோம்.

**''நன்றும் தீதும் பிறர் தந்து வாரா''**

**ச. சிவறணேசன்**
யாழ்ப்பாணம்.

## ஊரடங்கை தளர்த்த அமைச்சர் டக்ளஸ் உறுதி

(யாழ்ப்பாணம்)

வலிகாமம் மேற்கு உட்பட யாழ். குடாநாடு முழுவதும் திருவெம்பாவை உற்சவ காலப் பகுதியில் அதிகாலை 4 மணியுடன் ஊரடங்குச் சட்டத்தினை நீக்க உரிய நடவடிக்கை எடுப்பதாக அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள்ளார்.

எதிர்வரும் 31 ஆம் திகதி முதல் தொடர்ந்து 10 நாட்களுக்கு திருவெம்பாவை உற்சவம் அதிகாலை வேளையில் இந்து ஆலயங்களில் நடைபெறவுள்ளதால், மக்கள் இந்த ஆலய வழிபாட்டில் கலந்துகொள்ள வசதியாக ஊரடங்கு நேரத்தில் மாற்றம் ஏற்படுத்தப்பட வேண்டும் என வலிமேற்கு இந்து ஆலயங்களின் மகாசபையினர் நேரடியாகச் சென்று விடுத்த வேண்டுகோளிற்கே அமைச்சர் டக்ளஸ் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார். (உ)

## வேம்படி மகளிர் கல்லூரியில் வழிகாட்டல் கருத்தரங்கு

(யாழ்ப்பாணம்)

இலங்கை கல்வி நிர்வாக சேவைவகுப்பு - 3 போட்டிப் பரீட்சைக்கான வழிகாட்டல் கருத்தரங்கு இன்று தொடக்கம் வரும் 31 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமைவரை மு.ப 9.30 மணியில் இருந்து பி.ப 3 மணிவரை யாழ். வேம்படி மகளிர் கல்லூரியில் இடம் பெறவுள்ளது. இக்கருத்தரங்கு வரிசையில் இன்றைய தினம் கலாநிதி நா. தணிகாசலம்பிள்ளை க.கனகரத்தினம், கு. சண்முகநாதன் ஆகியோர் கருத்துரைகளை வழங்குவர்.

நாளைய தினம் பேராசிரியர்கலாநிதிஅ.சண்முகதாஸ், அ.பஞ்சலிங்கம் க. கனகரத்தினம் ப.விக்னேஸ்வரன் ஆகியோர் கருத்துரைகளை வழங்குவுள்ளனர். (உ)

## இராசி பலன்

27-12-2000
(மார்கழி 12, புதன்)
துதியை பி.இ 3.02 வரை
பூராடம் மு.ப 7.35 வரை
ராகுகாலம் 12.28- 1.58
சுபநேரம் 04.58- 06.28
அமிர்தம்.

**மேடம்**
முயற்சிகள் கைகூடும், தொழில் மேன்மை, அதிகாரம், நிலை மாற்றம்.

**இடபம்**
கட்டுப்பாடு, வயிற்றுக் கோளாறு அச்சமான நிலை, காரிய தாமதம் பிரயாணம்.

**மிதுனம்**
பிரயாண பயம், வியாதி, எதிர்பாராத பிரச்சினை, முயற்சி தடங்கல்.

**கடகம்**
தனவரவு, பிரயாணம், விருந்துபசாரம், வாகன வசதி.

**சிங்கம்**
நோய்குணமடைதல், பகைவர் விலகுவர், சந்தோசமான சம்பவம், காரிய ஜெயம்.

**கன்னி**
காரிய தடங்கல், தாழ்வு நிலை, ரோகம், மனக்கிலேசம்.

**துலாம்**
நிலைக்கேடு, பயந்த சுபாவம், தன்னம்பிக்கைக் குறைவு, காரியம் நிறைவேறும்.

**விருச்சிகம்**
முயற்சி வெற்றி, சந்தோசமான நிகழ்வு, தனவரவு, பிரயாணம்.

**தனுசு**
பொருள் விரயம், கௌரவக்குறைவு, காரிய தாமதம், வாக்குக் கலகம்.

**மகரம்**
சயன சுகம், புதியபொருள் சேர்க்கை, அபகீர்த்தி, காரியம் கைகூடும்.

**கும்பம்**
தனவிரயம், பிரயாணம், கோபப்படுதல், காரியதாமதம்.

**மீனம்**
மனமகிழ்ச்சி, நண்பர்கள் சந்திப்பு, பொருள் வரவு, முயற்சி பலிதம்.

[பழைய நேரப்படி கணிப்பிடப்பட்டது.]

வளவன்

### படுகொலை

னரில் மேற்படி இனவெறி பிடித்த மனநோயாளிகள் எத்தனை பேர் உள்ளார்கள் என்பதே எமது அச்சம்.

எனவேமிகவி ரவில் இனப் பிரச்சினைக்கு தீர்வு கண்டு இராணுவத்தை வெளியேற்றி விடுவதன் மூலமே பாரிய இன அழிவுகளை தடுத்து நிறுத்த முடியும். என்றும் அக் கடிதத்தில் தெரிவிக்கப் பட்டுள்ளது. (இ)

### வவுனியா

கொல்லப்பட்டவராவார்.

இதேவேளை வவுனியாவில் நேற்றுக்கலை 9மணி முதல் மாலை 4மணிவரை 83மில்லி மீற்றர் மழை பெய்திருப்பதாக வானிலை அவதான நிலையம் அறிவித்துள்ளது.

வவுனியாவில் மினிசூறாவளி வீசிய தலவை பகுதிகள் மின்சாரம் துண்டிக்கப் பட்ட நிலையில் வவுனியா நகரம் இருளில் மூழ்கியுள்ளதாகவும், போக்குவரத்து துண்டிக்கப்பட்டிருப்பதாக தொலைபேசிகள் செயலிழந்துள்ளதாகவும் தெரிவிக்கப் படுவதுடன், மணித்தியாலத்திற்கு 15 கிலோ மீற்றர் வேகத்தில் காற்று வீசுவதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (வ)

### மட்டு

களப்பு, அம்பாறை மாவட்டங்களில் மினி சூறாவழி வீசியது.

மட்டக்களப்பு தன்னாமுனையில் 33 ஆயிரம் வலுவுள்ள ஆறு மின்கோபுரங்கள் சரிந்து வீழ்ந்துள்ளதால் மட்டக்களப்பு மாவட்டத்திற்கான மின் விநியோகம் முற்றாகத் துண்டிக்கப்பட்டுள்ளது. (வ-108)

### பயண

| | |
|---|---|
| 173954 சி | 173974 ஏ |
| 174002 ஏ | 174002 பி |
| 174023 ஏ | 184023 பி |
| 174033 ஏ | 174036 ஏ |
| 174054 ஏ | 174054 பி |
| 174054 சி | 174069 ஏ |
| 174074 ஏ | 174086 ஏ |
| 174086 பி | 174090 ஏ |
| 174092 ஏ | 174092 யி |
| 174094 ஏ | 174094 பி |
| 174099 ஏ | 174099 பி |
| 177014 ஏ | 177014 பி |
| 174945 ஏ | 175724 ஏ |
| 175981 ஏ | |

# யுத்த நிறுத்தத்தை விமர்சிப்பது மக்களுக்குச் செய்யும் துரோகம்!

## சர்வமத அமைப்புக் கண்டனம்

(கொழும்பு)

தமிழீழ விடுதலைப்புலிகள் அறிவித்துள்ள யுத்த நிறுத்தத்தைத் சந்தேகக் கண் கொண்டு பார்க்காமலும், யுத்த நிறுத்த அறிவிப்பு எந்த நோக்கத்திற்காக அறிவிக்கப்பட்டது என்பதை கருத்தில் எடுக்காமல் அதனை சமாதானத்திற்கான சமிக்கையாகக் கொண்டு அரசாங்கம் பேச்சுவார்த்தை நடத்த வேண்டும் என்று சமாதானத்திற்கான சர்வமத அமைப்பு அரசைக் கோரியுள்ளது.

இது தொடர்பாக அந்த அமைப்பு விடுத்த அறிக்கையில் தெரிவித்திருப்பதாவது.

சுயநலம் கருதி புலிகளின் யுத்த நிறுத்தத்திற்கு களங்கம் கற்பிக்காமல் உடனடியாக அரசு யுத்தத்தை நிறுத்தி பேச்சுவார்த்தை நடத்தி சமாதான நடவடிக்கையை முன்னெடுக்க வேண்டும்.

காரணங்களை கற்பித்து பேச்சுவார்த்தையை பின் போடுவது நாட்டுமக்களுக்குச் செய்யும் துரோகமாகும் என்றும் அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (வ)

### எட்டுச்சடலங்கள்...

லங்களும் நேற்று உறவினர்களால் பொறுப்பேற்கப் பட்டபின் அவற்றைப் புதைத்துள்ளனர், ஏனைய மூன்று சடலங்கள் இன்று உறவினர்களால் புதைக்கப்படவுள்ளது.

சின்னையா வில்வராசா வில்வராசா பிரதீபன், வில்வராசா பிரசாந் ஆகியோரது சடலங்களே நேற்றுப் புதைக்கப்படாத சடலங்களாகும்.

இம்மரணச் சடங்குகளில் உறவினர்கள் உட்பட பலர் கலந்துகொண்டனர். (வ-23-43)

### ரூபா 2லட்சம்...

வாழ்வு புனரமைப்பு மற்றும் வடக்கு கிழக்கு தமிழர் விவகார அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா உத்தரவிட்டுள்ளார்.

இதனையடுத்து முதற்கட்ட கொடுப்பனவாக ஒவ்வொரு குடும்பத்துக்கும் இறுதிக் கிரியை செலவீனம் உள்ளடங்கலாக 50 ஆயிரம் ரூபாவழங்கப்பட்டுள்ளதாக ஈ.பி.டி.பியின் யாழ்மாவட்ட பிரதம அமைப்பாளரும் யாழ் மாவட்ட பாராளுமன்ற உறுப்பினருமான கே.வி. குகேந்திரன் தெரிவித்துள்ளார்.

இக்கொடுப்பனவை பருத்தித்துறைப் பிரதேச சபைத் தலைவர் ஸ்ரீரங்கேஸ்வரன் நேரில் சென்றுகையளித்தார். (இ)

### மிருசுவில்

ளப்பட்ட படுகொலைகள் தற்செயலாக ஏற்பட்ட ஒரு சம்பவம் அல்ல. படையினரால் திட்டமிட்டுச் செய்யப் பட்ட இனப்படுகொலைகளாகும் என்று அகில இலங்கைத் தமிழ்க்காங்கிரஸ் செயலாளர் கலாநிதி த. குமரகுருபரன் விடுத்த கண்டன அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

இப் படுகொலை தொடர்பாக ரெலோ எம்.பி செல்வம் அடைக்கலநாதன் மிருசுவில் படுகொலைகள் மூலம் அரசாங்கம் மேற்கொண்டு வரும் இனப்படுகொலைகள் வெளிச்சமாகத் தெரிவதாகக் கூறி கண்டனம் தெரிவித்துள்ளார்.

ஐக்கிய தேசியக் கட்சியின் யாழ்.மாவட்டஎம்.பி மகேஸ்வரன் இக் கொலைகளில் ஈடுபட்ட இராணுவத்தினரை இனங்கண்டு 'ட்ரயல் அற் பார்' நீதி மன்றில் தண்டிக்கப்பட வேண்டும் என்றும் கேட்டுள்ளார். (வ)

### எண்மரின்---

யாழ். மாவட்ட தலைமைச் செயலகம் விடுத்த அறிக்கையில் கேட்டுள்ளது.

இதுபோன்ற அசம்பாவிதச் சம்பவங்கள் இனிமேலும் தொடரமட்டாதென்ற உத்தரவாதத்தை படைத்தரப்பு எமக்கு அளிக்க வேண்டும்.

அத்துடன் இச்சம்பவத்துடன் தொடர்புடைய அனைவருக்கும் உரிய தண்டனை வழங்கப்படுவதுடன், இச்சம்பவத்தில் கொல்லப் பட்ட குடும்பத்திற்கு உரிய நஷ்டஈட்டை படையினர் வழங்க வேண்டும் எனவும் அவ்வறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ)


மகிழ்ச்சியான செய்தி!
ஆரம்பிக்கின்றோம்

A/L 2003

கலைவர்த்தகப் பிரிவுகள்)
ஜனவரி -- 06
காலை 8-00 மணி

DMI
யாழ்நகர்

(1994)


### பதவிமாற்றம்

இதுவரை செயலகங்களில் புள்ளி விபரவியல் ஆய்வாளர்களாகக் கடமையாற்றிய அனைவரும் புள்ளி விபரவியல் உத்தியோகத்தர்களாக பதவி மாற்றம் செய்யப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

உலக நாடுகள் பூராகவும் புள்ளி விபரவியல் ஆய்வாளர்கள் என்ற பதம் பாவிக்கப் படுவதில்லை எனவும் இலங்கையில் மட்டுமே இவ்வாறாக உள்ளது என்பதனையும் சுட்டிக்காட்டிபலவருடங்களாகத் தொழிற் சங்கங்கள் போராடிவந்தமைகுறிப்பிடத்தக்கது.

இவ்வாறாக அனைத்துச் செயலகங்களிலும் பதவி மாற்றம் செய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (உ-79)

### மனித

பிரகாரம் தாம் மிருசுவில் பகுதிக்குச் சென்ற போது அங்குவீசிய துர்நாற்றத்தை அடுத்து இராணுவத்தினருக்குத் தெரியாது புதைகுழி ஒன்றைத் தோண்டிய போது அதனுள் சுமார் 18 வயது மதிக்கத்தக்க இளம் பெண் ஒருவரின் சடலம் ''மஞ்சள் நிற பஞ்சாபி'' உடுப்புடன் காணப்பட்டதாகத் தெரிவித்திருந்தார்.

அச் சடலம் கிடந்த இடத்திற்கு பாதணிகளை அடையாளமாக வைத்து விட்டு வந்ததாகவும், அதனை அடுத்தநாள் தோண்டி எடுப்பதற்காகவே எட்டுப்பேரையும் கூட்டிச் சென்றதாகவும் அச் சமயமே இந்தக் கொடூரம் நிகழ்ந்ததகவும் ஜெசுதா தெரிவித்துள்ளார். துர்நாற்றம் குறித்து மிருசுவிலில் உள்ள இராணுவத்தினரிடம் கேட்டபோது ஷெல் தாக்குதலுக்குப் பலியான ஒருவரின் சடலம் புதைக்கப்பட்டிருப்பதாக இராணுவத்தினர் தெரிவித்தனர் என்று தன்னிடம் கணவர் கூறியதாகவும் தெரிவித்தார்.

இதனைத் தொடர்ந்து 19 ஆம் திகதி மீண்டும் எனது கணவர் அப்பகுதிக்குச் சென்றபோது இத்தகைய பரிதாபகரமான முறையில் மரணத்ததைத் தழுவிக் கொண்டார் என்றும், இது தொடர்பான மரண விசாரணையின் போது கணவர் என்னிடம் கூறிய விடயத்தைக் கூறப்போவதாகவும் தெரிவித்தார்.

இக் கொலையின் பின்னணியில் எட்டுப்பேரினதும் மரண விசாரணை நாளை வியாழக்கிழமை நடைபெறும் போது பல திடுக்கிடும் தகவல்கள வெளிவரலாம் என்றும் எதிர் பார்க்கப்படுகிறது. (வ-23-43)


NEW SCIENCE HALL

கன்னாதிட்டி வீதி, யாழ்ப்பாணம்

2003 A/L

★ கணித, உயிரியற் பிரிவுகட்கான வகுப்புகள் ★

ஆரம்பம்:- 28-12-2000 வியாழன்

காலை 8-00 மணி (பழைய நேரம்)

| பௌதீகவியல் | உயிரியல் |
|---|---|
| திரு சோதிலிங்கம் | திரு தம்பிராஜா |
| | திரு கெங்காதரன் |
| திரு குமரன் | திரு குணசிலன் |

| இரசாயனவியல் | இணைந்த கணிதம் |
|---|---|
| திரு மாகாதேவா | திரு பத்மநாதன் |
| திரு மணியம் | திரு குணம் |
| திரு சிவத்திரன் | திரு செந்தில்ராஜ் |

குறிப்பு:-
2003 - A/L - கணித உயிரியல் பிரிவுகட்கு அனுமதி பெற்ற மாணவர்கள் அனைவரும் அனுமதி பெற்ற பற்றுச்சீட்டுடன் காலை 8.00 மணிக்கு (28-12-2000) வகுப்புகளுக்கு சமூகம் அளிக்கவும்.

(2047)



பயிலுநர் தேவை

★ அச்சுக்கோப்புப் பயிலுநர்கள்

ஆண்கள் (இரவு நேரம் மட்டும்)
பெண்கள் (பகல்)

கல்விச் சான்றிதழ்களுடன் நாளை 10 மணிக்கு நேரில் வரவும்

நிர்வாகம்
வலம்புரி


இப் பத்திரிகை ''வலம்புரி'' அன்கோ ஸ்தாபனத்தினரால் இல. 15 வெள்ளாந்தெரு, யாழ்ப்பாணம் எனும் விலாசத்தில் அமைந்துள்ள அவர்களது அச்சகத்தில் 2000 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 27ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.